வாக்குமூலம்

உரிமையியல்மற்றும்குற்றவியல்நடுவர்நீதிமன்றம், மாதவரம்.

வழக்குஎண். CC 178/2021

வழக்குசாட்சி LW9/PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோபிநாத், ஆய்வாளர், செங்குன்றம் போக்குவரத்து புலனாய்வு பிரிவு | ஜாதி | |
| கணவர்/தந்தை | வேம்புளி | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 55 |

தேதி 17.06.2026

எதிரி ஆஜர்.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது செங்குன்றம் போக்குவரத்து புலனாய்வுப் பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி ஆவேன். கடந்த 11.03.2021 அன்று மாதவரம் காவல் நிலையத்தில் நான் பணியில் இருந்த போது காலை 11 மணி திரு.நவீன் அளித்த புகாரினை பெற்று மாதவரம் காவல் நிலைய குற்ற எண். 70/2021 ஆக இ.த.ச.பிரிவுகள் 392, 506(ii) கீழ் முதல் தகவல் அறிக்கையினை பதிவு செய்தேன். மேற்படி புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையானது அ.த.சா.ஆ.1, 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நான் எதிரியை தேடிவந்த நிலையில் சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகள் நவீன், நாராயணன், உசேன், கோபால் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம்

பதிவுச் செய்தேன். பின்னர் கார்த்திக் , ரவி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். மேற்படி பார்வை மகஜர் அ.த.சா.ஆ.3 ஆகவும், மாதிரி வரைபடமானது அ.,த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் கார்த்திக் , ரவி ஆகியோர்ளை விசாரணைச் செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவுச் செய்தேன். பின்னர் வழக்கு எதிரியை தேடிவந்த நிலையில் அன்று பகல் 02.00 மணிக்கு மாதவரம் மூலக்கடை அருகே எதிரியை கைதுச் செய்து தேக பரிசோதனை செய்த போது எதிரியிடம் இருந்த அரை அடி நீளமுள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய கத்தி ஒன்று, பணம் ரூ. 300 னை மகஜர் மூலம் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் கணேசன், பாஸ்கரன் முன்னிலையில் ஒப்புக்கொண்டதால் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலமானது பதிவு செய்தேன். பின்னர் எதிரிகளை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்னர் எதிரி நீதிமன்றத்தில் பிணையம் பெற்று இந்நாள் வரை பிணையில் இருந்து வருகிறார். கைப்பற்றுதல் மகஜரானது அ.த.சா.ஆ.5 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. பின்னர் விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

சம்பவ இடமான பாலாஜி டாஸ்மாக் கடையில் வேறு நபர்களை விசாரணைச் செய்தோமா என்றால் இல்லை. வள்ளிபவன் ஓட்டலில் யாரையும் விசாரணைச் செய்தோமா என்றால் இல்லை. வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்பதால் சம்பவ இடமான கடையில் அனைவரையும் தெரியும் என்பதால் தெரியாத வெளியூர் நபர்களை கொண்டு எதிரி மீது இவ்வழக்கினை பொய்யாக பதிவுச் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரியிடம் கைப்பற்றியதாக கூறும் தடய பொருட்கள் என்னால் உருவாக்கப்பட்டவை என்றால் சரியல்ல.

சம்பவ இடம் அதிக எண்ணிகையும், போக்குவரத்து அதிகம் உள்ள பகுதி என்றால் சரிதான். சம்பவ இடத்தில் போக்குவரத்து போலீசார் எப்போதுமே தொடர்ந்து இருப்பார்கள் என்றால் சரிதான். சம்பவ பார்வை மகஜர், வரைபடங்கள் நானாக தயார் செய்தது என்றால் சரியல்ல. புள்ளிவிவரத்திற்காக எதிரி மீது பதிவுச் செய்யப்பட்ட பொய்யான வழக்கு என்றாலும் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.